**பெருநகர சென்னை மாநகராட்சி**

**செய்தி வெளியீடு**

**செ.வெ.எண். 258** **நாள் : 09.09.2025**

**மாண்புமிகு மேயர் திருமதி ஆர்.பிரியா அவர்கள், சென்னை பள்ளிகளில் 4 மற்றும் 5ஆம் வகுப்பு பயிலும் மாணவர்களுக்கான கல்விச் சுற்றுலாவினை கொடியசைத்துத் தொடங்கி வைத்தார்.**

மாண்புமிகு மேயர் அவர்களின் நிதிநிலை அறிக்கை அறிவிப்பின்படி, சென்னை பள்ளிகளில் 4 மற்றும் 5ஆம் வகுப்பு பயிலும் மாணவர்களுக்கான கல்விச் சுற்றுலாவினை மாண்புமிகு மேயர் திருமதி ஆர்.பிரியா அவர்கள் இன்று (09.09.2025) ரிப்பன் கட்டட வளாகத்தில் கொடியசைத்துத் தொடங்கி வைத்தார்.

இந்நிகழ்வில், மாண்புமிகு மேயர் அவர்கள் கல்விச் சுற்றுலா செல்லும் மாணவர்களிடம் கலந்துரையாடி, பாதுகாப்பாகச் செல்லுமாறும், சுற்றுலா செல்லும் இடங்களில் அவ்விடம் தொடர்பான தகவல்களை தெரிந்து கொள்ள வேண்டும் எனவும், மாணவர்கள் கல்வி மற்றும் பொது அறிவு சிந்தனையை இதன் மூலமாக வளர்த்துக் கொள்ள வேண்டும் எனவும் எடுத்துரைத்து வாழ்த்துகளைத் தெரிவித்தார்.

இந்த கல்வியாண்டில் (2025–26) 130 சென்னை பள்ளிகளில் 4 மற்றும் 5 ஆம் வகுப்பு பயின்று வரும் 5,335 மாணவர்களை, சென்னை மற்றும் அதனைச் சுற்றியுள்ள பிர்லா கோளரங்கம், ஆவின் பால் நிலையம், வண்டலூர் உயிரியல் பூங்கா, பெரியார் அறிவியல் பூங்கா, ஐ.சி.எஃப். அருங்காட்சியகம், காவல் அருங்காட்சியகம், கன்னிமாரா நூலகம், அண்ணா நூற்றாண்டு நூலகம், எழும்பூர் அருங்காட்சியகம், வள்ளுவர் கோட்டம், மெரினா கடற்கரை-அண்ணா நினைவிடம் மற்றும் டாக்டர் கலைஞர் நினைவிடம் ஆகிய இடங்களில் ஏதாவது 4 இடங்களுக்கு தமிழ்நாடு அரசின் மாநகரப் போக்குவரத்துக் கழகப் பேருந்துகள் மூலம் கல்விச் சுற்றுலா அழைத்துச் செல்லப்படவுள்ளனர்.

இந்தச் சுற்றுலாவானது மண்டலம் 1 முதல் 15 வரையிலான மண்டலங்களில் உள்ள 130 சென்னை பள்ளிகளில் 4 மற்றும் 5ஆம் வகுப்பு பயிலும் மாணவர்களை ஒரு பேருந்துக்கு சராசரியாக சுமார் 55 மாணவர்கள் வீதம் பள்ளியில் பயிலும் மாணவர்களின் எண்ணிக்கைக்கேற்ப 97 பேருந்துகளில் மொத்தம் 5,335 மாணவர்கள் ஒவ்வொரு வாரமும் திங்கள் முதல் வெள்ளிக்கிழமை வரை கல்விச் சுற்றுலா அழைத்து செல்ல ஏற்பாடு செய்யபட்டுள்ளது.

அதன்படி, இன்று (09.09.2025) கோபாலபுரம், கே.சி.கார்டன், ரங்கசாயி, எம்.எச்.சாலை, ஏகாங்கிபுரம் ஆகிய இடங்களில் உள்ள 5 சென்னை பள்ளிகளைச் சார்ந்த 300 மாணவர்கள் பிர்லா கோளரங்கம், பெரியார் அறிவியல் பூங்கா, வள்ளுவர் கோட்டம், கலைஞர் நினைவிடம், காவல் அருங்காட்சியகம், கன்னிமாரா நூலகம் ஆகிய இடங்களுக்கு 6 பேருந்துகளில் முதலாவது நாளில் அழைத்துச் செல்லப்பட்டனர்.

இதுபோல கடந்த 2024-25ஆம் கல்வியாண்டிலும் சென்னை பள்ளிகளில் 4 மற்றும் 5ஆம் வகுப்பு பயின்ற மாணவர்கள் கல்விச் சுற்றுலா அழைத்து செல்லப்பட்டு பயனடைந்துள்ளனர்.

இந்நிகழ்வில், துணை ஆணையாளர் (வருவாய் (ம) நிதி) திரு.ம.பிரதிவிராஜ், இ.ஆ.ப., நிலைக்குழுத் தலைவர் (கல்வி) திரு.த.விசுவநாதன் மற்றும் கல்வி அலுவலர்கள், ஆசிரியர்கள் கலந்து கொண்டனர்.

**செய்தி வெளியீடு : இணை இயக்குநர் / மக்கள் தொடர்பு அலுவலர்,**

**பெருநகர சென்னை மாநகராட்சி.**